1. இயேசு தேவனுக்கு முதலிடம் கொடுத்தப்போது....

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது நமக்கு கடினமானதாக இருக்கலாம். நாம் இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்கின்ற பாடம் நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்க உதவியாக இருக்கும்.

ஒவ்வொரு புதுவருடத்துவக்கத்திலும் இந்த வருடம் கடந்த வருடத்தைவிட சிறப்பானதாக இருக்கும் என்கிற எதிர்பார்ப்பு நமக்கு இருக்கும். அனைவருக்கும் புதியது என்கிற எண்ணம் உற்சாகத்தை கொடுக்கும். இயேசுவின் தமது முப்பதாவது வயதில் புது வாழ்வினை ஆரம்பித்தார். யோர்தான் நதியில் ஞானமுழுக்கு பெற்றபின்பு அவரது ஊழியம் ஆரம்பமானது. ஆனால் ஞானமுழுக்கு பெற்ற பின்பு நடந்தது மிகவும் விசித்திரமானது. அது இந்த புதிய 2021ம் வருடத்தில் நமக்கு உதவியாக இருக்கும். மத்தேயு 4:1 இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவரால் வனாந்திரத்திற்குக் கொண்டுப் போகப்பட்டார் என்று சொல்கிறது. இது விசித்திரமானதாக இல்லையா?

ஆதாம் ஏவாளை ஏதேன் தோட்டத்தில் வஞ்சித்தது போல இயேசு கிறிஸ்துவை வஞ்சிப்பதற்கு சாத்தான் இந்த நேரத்திற்காக காத்துக்கொண்டிருந்தான். இயேசு தன்னை முதலாவது வைக்கும்படி சாத்தான் செய்திருந்தால் முழு யுத்தமும் தோல்வியடைந்திருக்கும்.

எனவே சாத்தான் உணவினால் சோதனையை ஆரம்பித்தான். ஆயிரக்காணக்கான வருடங்களாக மனிதர்கள் தங்கள் சரீர தேவைகளை சந்திக்க எதையும் செய்கிறதை எதிராளியானவன் கவனித்திருந்தான். இயேசு நாற்பது நாள் இரவும் பகலும் உபவாசிமிருந்த பின்பு அவருக்கு பசியுண்டாயிற்று என்று மத்தேயு எழுதுகிறார். இயேசு முழுமையான மனிதனாக இருந்தார். ஆகையால் சரீரத்தேவையினால் பாதிக்கப்பட்டார் என்பதை நாம் அறிந்து கொள்ளும்படி வெளிப்படையாக மத்தேயு எழுதியுள்ளார்.

இயேசுவின் முதல் சோதனை அவருடைய அடையாளத்தை சந்தேகிக்கிறதாகவும் சரீரத்தேவைக்கு முதலிடம் கொடுப்பதாகவும் இருந்தது. நீங்கள் உங்கள் சரீரத்தேவைகளுக்கு முதலிடம் கொடுக்கும்படி இந்த வருடம் முழுவதிலும் சோதிதக்கப்படலாம். தேவன் உங்களை தம்முடைய பிள்ளைகள் என அழைக்கிறார். ஆனால் ஒவ்வொரு நேரத்திலும் தேவனுக்கா அல்லது உங்கள் சொந்த சரீரத்தேவைகளுக்கா எதற்கு முதலிடம் கொடுப்பது என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். இயேசு தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். பிசாசனவன் இயேசுவை ஆலயத்தின் உச்சிக்கு கொண்டு சென்றான். இயேசு சோதிக்கப்பட்டார். இரண்டாம் சோதனை இயேசு உணர்வுக்கு முதலிடம் கொடுக்கும்படி இருந்தது. வேறு விதமாக சொல்லவேண்டுமானால் தேவனுடைய வார்த்தை தேவனை குறித்து சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்வது அல்லது தேவனுடைய அன்பிற்கான வெளிப்படையான அடையாளம் தேவைப்படுகிறதா என்பதில் எதாவது ஒன்றை தெரிந்து கொள்வதாக இருந்தது. இயேசு தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். கடைசியாக பிசாசானவன் இயேசு நிறைவேற்றும்படியாக வந்த பணியை முன்வைத்தான். குறுக்கு வழியில் அதை பெற்றுக்கொள்ள சோதித்தான். மூன்றாம் சோதனை பிசாசானவன் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் இயேசுவுக்கு காண்பித்து என்னை பணிந்து கொண்டால் இவைகளையெல்லாம் உமக்கு தருவேன் என்று சொன்னான். அப்போது இயேசு அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரை பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறது என்றார். இயேசு தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். அவருடைய முன்மாதிரியான வாழ்க்கை நாமும் அதை செய்ய கட்டாயப்படுத்துகிறது. உதவியாளர்கள் 2021ம் ஆண்டில் முதல்முறை தசமபாகம் மற்றும் காணிக்கை சேகரிக்கும் போது நாம் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதற்கான சவாலாக உள்ளது.

அன்புள்ள பரலோக தகப்பனே நாங்கள் எங்கள் தசமபாகம் மற்றும காணிக்கைகளோடு உம்மை தொழுது கொள்கிறோம். எங்கள் வாழ்க்கையில் உமக்கு முதலிடம் கொடுக்க தைரியம் தரும்படி ஜெபிக்கிறோம். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

2.ஆபிரகாம் தேவனுக்கு முதலிடம் கொடுத்தப்போது…

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது நமக்கு கடினமானதாக இருக்கலாம். ஆபிரகாமிடம் இருந்து நாம் கற்றுக்கொள்வது நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்க உதவியாக இருக்கும்.

ஆபிரகாம் தன்னுடைய ஐசுவரியமான செழிப்பான வீட்டை விட்டு வனாந்திரத்திற்கு பயணப்படும் போது ஆபிரகாமுக்கு ஏழுபத்தைந்து வயது. தேவன் ஆபிரகாமை அழைத்தார். ஆபிரகாம் தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். ஆனால் கொஞ்ச வருடத்திற்கு பின்பு ஆபிரகாம் தன்னுடைய உயிரை காக்க பொய் சொன்னார். ஆபிரகாம் ஏன் மிகவும் பயப்பட்டார்?. தேவனுக்கு முதலிடம் கொடுப்பதை நிறுத்திவிட்டாரா? உங்கள் வாழ்க்கையில் எப்பொழுதாவது இயேசுவை பின்பற்றுவதற்காக எல்லாவற்றையும் விட்டுவந்த நேரங்கள் உண்டா? நம்மில் அனேகர் பல சமயங்களில் இந்த அனுபவம் உடையவர்களாக இருக்கிறோம். ஆனால் நேரம் கடக்கும் போது தான் நம்முடைய உண்மைத்தன்மை வழக்கம் போல மாறிவிடுகிறது. நாம் தேவனுக்கு இரண்டாம் இடத்தையோ அதைவிட மோசமான இடத்தையோ கொடுக்கிறோம்.

நாம் எதிர்பார்த்த காரியங்கள் நம்முடைய வாழ்க்கையில் நடைபெறாததால் நம்மில் சிலர் ஏமாற்றம் அடைகின்றோம். நீங்கள் கடந்த ஆண்டில் செய்து முடிக்க வேண்டும் என்று திட்டமிட்ட அனைத்தையும் செய்து முடித்தீர்களா? இல்லையென்றால் நம்முடைய சொந்த விருப்பங்களினாலும் பயங்களினாலும் விழுந்து போவது எளிதானதாகும் .

ஆதியாகமம் 15:2. ‘‘அதற்கு ஆபிரகாம் கர்த்தராகிய ஆண்டவரே அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே என்றான்’’. ஆபிரகாம் தன்னுடைய வாக்குத்தத்தம் நிறைவேற தேவனிடம் வேண்டிக்கொள்ள தைரியம் உடையவராக இருந்தார். பின்பு ஆபிரகாமுக்கு சந்ததியும் அவர்களுக்கான தேசமும் வாக்குத்தத்தமாக தேவனால் கொடுக்கப்பட்டது. சில நேரங்களில் தேவனிடம் கலந்துரையாட முக்கியமான தேவைகள் நமக்கு இருக்கலாம். உங்களுக்கு உங்கள் பரலோக தகப்பனிடம் சொல்லவேண்டிய சில காரியங்கள் இருந்தால் அமைதியாக இருக்க வேண்டாம். நீங்கள் ஏமாற்றமடைகிறீர்களா? தேவனிடம் சொல்லுங்கள். தேவன் நான் உன்னுடன் இருப்பேன் என்று வாக்குப்பண்ணியிருக்கும் போது நீங்கள் தனிமையாக இருப்பதாக உணருகிறீர்களா? ஆபிரகாமைப் போல தேவனிடம் கேளுங்கள்.

தேவன் ஆபிரகாமை அவருடைய கூடாரத்தைவிட்டு வெளியே வரும்படி அழைத்தார். நான் கொடுக்கிறதை பெற்றுக்கொள்ள உன்னுடைய கூடாரத்தின் கூரை போதுமானதாக இல்லை எனவும் தேவன் தேவனாக இருக்கிறா என்றும் கூறினார். ஆனால் ஆபிரகாம் அப்படி அல்ல என்பதை ஆபிரகாமுக்கு தேவன் நினைவுபடுத்தினார். ஆபிரகாம் தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். ஆபிராம் என்ற அவருடைய பெயர் ஆபிரகாம் என்று மாற்றப்பட்டது. ஆபிரகாம் தேவனுக்கு முதலாவது கொடுத்தார். அவருடைய முன்மாதிரியான வாழக்கை நம்மையும் அப்படி செய்ய கட்டாயப்படுத்துகிறது. உதவியாளர்கள் தசமபாகம் மற்றும் காணிக்கை சேகரிக்கும் போது நாம் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதற்கு சவாலாக உள்ளது. ஆனாலும் கொடுப்போம்.

பரலோகத்தின் தகப்பனே உம்மையும் உம்முடைய ராஜ்யத்தையும் முதலாவது தேட உதவி செய்யும். எங்கள் தொழுகையை ஏற்றுக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

3.மோசே தேவனுக்கு முதலிடம் கொடுத்தப்போது...

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது நமக்கு கடினமானதாக இருக்கலாம். மோசேயிடம் நாம் கற்றுக்கொள்கிறது நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்க உதவியாக இருக்கும்.

மோசே தன்னுடைய பலத்தினால் இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்க நினைத்தார். ஆனால் அவரால் இயலவில்லை. மோசே எகிப்தை விட்டு துரத்தப்பட்டார். தேவனுடைய ஜனங்களை விடுவிக்க வேண்டும் என்கிற அவருடைய கனவு நடைபெறவில்லை. பல வருடங்கள் வனாந்திரத்தில் ஆடுகளை மேய்த்து கொண்டிருந்தார். தேவன் மோசேயின் வாலிப வயதின் கனவை நடப்பிப்பதற்கு மோசேயை அழைத்தார். இப்பொழுது மோசே ஆயத்தமாக இல்லை. ஆண்டவரே நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன் என்றார். "அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும், செவிடனையும், பார்வையுள்ளவனையும், குருடனையும் உண்டாக்கினவர் யாா? கர்த்தராகிய நான் அல்லவா? ஆதலால், நீ போ நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்கு போதிப்பேன் என்றார். (யாத். 4:11-12).

மோசே தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். அவருடைய முழ தேசமும் அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கப்பட்டது. மோசே குறைகள் இல்லாமல் பரிபூரணமானவராக இருக்கவில்லை. நாமும் அதுபோல குறைகளோடு இருந்தாலும் மோசேயை அழைத்தது போல நம்மையும் தேவனுக்கு முதலிடம் கொடுக்கும்படி தேவன் அழைக்கிறார். நாம் ஒவ்வொருவரும் செய்யும்படியான விசேஷித்த ஊழியம் நமக்கு இருக்கிறது. அதை தேவனுக்கு முதலிடம் கொடுப்பதால் மட்டுமே செய்து முடிக்க முடியும். அது கடினமானதாக இருந்தாலும் பரிசுத்த ஆவியானவர் அதை செய்து முடிக்க தைரியத்தை கொடுத்து நமக்கு உதவி செய்வார். மோசே தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். அவருடைய முன்மாதிரியான வாழ்க்கை நம்மையும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க கட்டாயப்படுத்துகிறது.

உதவியாளர்கள் தசமபாகம் காணிக்கை சேகரிக்கும் போது நாம் தேவனுக்க முதலிடம் கொடுப்பதற்கு சவாலாக நமக்கு உள்ளதா?.

பரலோக தகப்பனே முதலாவது உம்மையும் உம்முடைய ராஜ்யத்தையும் தேட உதவி செய்யும். எங்களுடைய தொழுகையினை ஏற்றுக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

4. யோசுவா தேவனுக்கு முதலிடம் கொடுத்தார்.

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது நமக்கு கடினமானதாக இருக்கலாம். யோசுவாவிடம் நாம் கற்றுக்கொள்கிறது நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்க உதவியாக இருக்கும்.

யோசுவா எகிப்து தேசத்தில் அடிமையாக இருந்தார். அவருடைய எஜமானனுடைய சவுக்கால் பல முறை அவருடைய தோல் கிழியப்பட்டிருக்கும். ஒரு நாள் வயதான ஒரு மனிதர் பார்வோனிடம் சென்று இஸ்ரவேல் ஜனங்களை விடுதலை செய்யும்படி சொல்கிறார். எகிப்தின் அனைத்து தேவர்களும் ஒரே உண்மையான யேகோவா தேவனால் தாழ்த்தப்படுகிறார்கள். அதன் பிறகு சீக்கிரத்தில் இஸ்ரவேலர் விடுதலை பெற்று செங்கடலை கடக்கிறார்கள். அதன் பின்பு யோசுவா மோசேயுடைய பணிவிடைக்காரனாக மாறினார்.

தேவன் மோசேயிடம் பத்து பிரமாணத்தை கொடுக்க அழைக்கும் போது யோசுவாவும் உடன் சென்றார். கானான் தேசத்தை வேவு பார்க்க இஸ்ரவேல் ஜனங்களில் கோத்திரத்திற்கு ஒரு நபர் தேர்ந்தெடுக்கப்படும் போது யோசுவா அவருடைய கோத்திரத்தினால் தேர்வு செய்யப்பட்டார். தேவன் வாக்குப்பண்ணின தேசத்தை வேவுபார்க்க சென்றது பயங்கரமான அனுபவமாக யோசுவாவுக்கு இருந்திருக்கும். பன்னிரண்டு பேரும் ஒரே தேசத்தை பார்த்தார்கள். பத்து நபர்கள் கனானியர்கள் யுத்தத்தில் நம்மை அழித்துவிடுவார்கள் என்றார்கள். யோசுவா மற்றும் காலேப் தேவன் நமக்கு இந்த தேசத்தை கொடுப்பார் என்று என்று பத்து பேருக்கும் எதிராக நின்றார்கள். நாற்பது வருடங்களுக்கு பிறகு யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தி தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டார். அது எளிதான காரியம் அல்ல. என்ன நடந்தாலும் பொருட்படுத்தாமல் யோசுவா தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். யோசுவாவின் வயதான காலத்தில் இஸ்ரவேல் ஜனங்களிடம் பேசின வார்த்தைகள் யோசுவா 24:15ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**கர்த்தரை**ச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள் நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால்இ **கர்த்தரையே** சேவிப்போம் என்றான்.

யோசுவா தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். அவருடைய முன்மாதிரியான வாழ்க்கை நாமும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க நம்மை கட்டாயப்படுத்துகிறது. உதவியாளர்கள் தசமபாகம் காணிக்கை சேகரிக்கும் போது நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்க நமக்கு சவலாக உள்ளது.

பரலோக தகப்பனே உம்மையும் உம்முடைய ராஜ்யத்தையும் முதலாவது தேட உதவிசெய்யவும். எங்களுடைய தொழுகையை ஏற்றுக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

5 ரூத் தேவனுக்கு முதலிடம் கொடுத்தாள்

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது நமக்கு கடினமானதாக இருக்கலாம். ரூத்தினுடைய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்க உதவியாக இருக்கும்.

ரூத் பிறப்பின்படி இஸ்ரவேல் தேசத்தை சார்ந்தவள் அல்ல. ரூத் மோவாப் தேசத்தை சார்ந்தவள். ரூத் கீமோஸ் என்ற மீன் கடவுளை தொழுகை செய்பவளாக இருந்திருக்கக்கூடும். 2 இராஜாக்கள் 3:27வது வசனத்தில் மோவாபிய ராஜா அவருடைய மகனை கீமோஸ் கடவுளுக்கு பலியாக கொடுப்பதின் மூலம் கீமோஸ் அழிக்கிற கடவுள் என்று அறிந்து கொள்கிறோம். இதற்கு மாறாக ரூத்தினுடைய அத்தையான நகோமி தன்னுடைய ஜனங்களை அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்து ஒருவருக்கொருவர் அன்பு மற்றும் மரியாதை செலுத்த அழைத்து இஸ்ரவேலர்களுடைய அன்பின் தேவனாகிய யேகோவாவை குறித்து சொல்கிறாள்.

ரூத் இந்த சம்பவத்திற்கு முன்னமே யேகோவா தேவனை தொழுது கொள்ள ஆரம்பித்திருக்கலாம். நகோமி தன் கணவனையும் இரண்டு மகன்களையும் சில வருடங்களுக்குள்ளாக மகன்களையும் சில வருடங்களுக்குள்ளாக இழுக்க கொடுத்திருந்தாள். அவளுடைய மருமகன்களான ரூத் மற்றும் ஓர்பாள் விதவைகளானார்கள். அவர்களுடைய கணவர்கள் உயிரோடு இருக்கும் போதே வாழ்க்கை கடினமானதாக இருந்தது. ஆனால் இப்போது சூழ்நிலை மிகவும் மோசமானதாக ஆனாது.

நகோமி இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பிவர தீர்மானித்து மருமகள்கள் இருவரையும் அவர்கள் தகப்பன் வீட்டுக்க அனுப்புகிறாள். ஓர்பாள் தன்னுடைய வீட்டுக்கு சென்றாள். ரூத்தோ போகவில்லை. ரூத் தன்னுடைய இருண்ட வாழ்க்கையில் தேவனை பழிகூறவில்லை. அதற்கு பதிலாக தேவனுக்கு முதலிடம் கொடுத்தாள். யேகோவா தேவனை தொழுது கொள்ள ரூத் மற்றும் நகோமி பயணப்பட்டார்கள். ரூத் 1:16வது வசனத்தில் ரூத்தினுடைய வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

“அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.”

உங்களுடைய வாழ்க்கையும் ஒருவேளை கடினமானதாக இருக்கலாம். தேவனுக்கு முதலிடம் கொடுப்பதால் நம்முடைய வாழ்க்கை எளிதானதாக இருக்கும் என்கிற உத்திரவாதம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் நாம் இரட்சிப்பையும் சமாதானத்தையும் கண்டு கொள்ளலாம். ரூத் வாழ்க்கையில் அதன்பின்பு அன்பான கணவனை பெற்றுக்கொண்டாள். தேவனுடைய ஜனங்களுடன் இணைந்தாள். உலகத்தின் இரட்சகரான இயேசுவின் நேரடியான மூதாதையர் என்கிற மரியாதையினை பெற்றுக்கொண்டாள்.

ரூத் தேவனுக்கு முதலிடம் கொடுத்தாள் அவருடைய முன்மாதிரியான வாழ்க்கை நம்மையும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க கட்டாயப்படுத்துகிறது. உதவியாளர்கள் தசமபாகம் மற்றும் காணிக்கை சேகரிக்கும்போது தேவனுக்கு முதலிடம் கொடுக்க நமக்கு சவாலாக உள்ளது.

பரலோகத் தகப்பனே, உம்மையும், உம்முடைய ராஜயத்தையும் முதலாவது தேட எங்களுக்கு உதவி செய்யும். எங்கள் தொழுகையை ஏற்றுக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

1.

6.அன்னாள் தேவனுக்கு முதலிடம் கொடுத்தாள்.

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது நமக்கு கடினமானதாக இருக்கலாம். அன்னாளுடைய வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்கிறது நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்க உதவியாக இருக்கும்.

அன்னாள் அவளுடைய வாழ்க்கையில் ஆச்சரியமான அதிசயத்தை அனுபவித்திருந்தாள். தேவன் அன்னாளுடைய ஜெபத்தைக் கேட்டு ஒரு மகனை கொடுத்தார். அன்னாள் தான் கர்ப்பவதி ஆனதை அறிந்ததுதம் மிகவும் மகிழ்ந்திருப்பாள். சில மாதங்களுக்கு முன்பு தேவனுடைய ஆலயத்தில் சென்று அவளுடைய இதயத்தை திறந்திருந்தாள். தேவன் ஒரு ஆண் குழந்தையை கொடுத்தால், அவருக்கே அவருடைய ஊழியத்திற்காக அந்த குழந்தையை கொடுப்பேன் என்று பொருத்தனை பண்ணினாள். இப்பொழுது ஒரு குழந்தைக்கு தாயானாள். அந்த குழந்தைக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள். சாமுவேல் என்றால் ‘தேவன் கேட்டார்’ என்று அர்த்தம். அன்னாள் குழந்தை சாமுவேலோடு உட்கார்ந்து தேவனை குறித்து பல கதைகளை சொல்வதை நாம் கற்பனை செய்து பார்க்கலாம்.

சாமுவேல் ஒரு அதிசய குழந்தை. அன்னாள் சாமுவேலை முழு இருதயத்தோடு நேசித்தாள். ஆனால் காலம் கடந்து சென்றது. அன்னாள் தன் குழந்தை சாமுவேலை பொருத்தனை செய்தது போல தேவனுடைய ஆலயத்தில் விடவேண்டும். அன்னாள் தான் அதிகமாக நேசித்த தன் குழந்தையை தேவனுக்கு கொடுப்பது கடினமானது தான். அனேக வேளையில் தேவனுக்கு முதலிடம் கொடுப்பது கடினமானது. அன்னாள் தேவனுக்கு முதலிடம் கொடுத்து தன் குழந்தையை ஆலயத்தில் சென்று விட்டாள். அன்னாளுடைய வார்த்தைகள் 1 சாமுவேல் 2:1-2 வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

“அப்பொழுது அன்னாள் ஜெபம் பண்ணி: என் இருதயம் **கர்த்தருக்குள்**களிகூருகிறது; என் கொம்பு **கர்த்தருக்குள்** உயர்ந்திருக்கிறது; என் பகைஞரின்மேல் என் வாய் திறந்திருக்கிறது; உம்முடைய இரட்சிப்பினாலே சந்தோஷப்படுகிறேன். **கர்த்தரை**ப்போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை; உம்மையல்லாமல் வேறொருவரும் இல்லை; எங்கள் தேவனைப்போல ஒரு கன்மலையும் இல்லை.”

இஸ்ரவேல் ஜனங்களுடைய சரித்திரத்தில் சாமுவேல் ஒரு பெரிய தீர்க்கதரிசி ஆனாள். சவுல் மற்றும் தாவீது ஆகிய இருவரையும் இஸ்ரவேல் ராஜாவாக சாமுவேல் அபிஷேகம் பண்ணினார். அன்னாள் தேவனுக்கு முதலிடம் கொடுத்திருக்கவில்லையென்றால் இந்த காரியங்கள் நடை பெற்றிருக்காது. நீங்கள் பெற்றோர்களாக இருந்தால் தேவனுக்கு நீங்கள் முதலிடம் கொடுப்பதால் உங்கள் குழந்தைகள் மேல் என்ன ஒரு தாக்கம் ஏற்படும் என்று எப்போதாவது நீங்கள் நினைத்தது உண்டா?

பெற்றோர்கள் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதால் அவர்கள் பிள்ளைகள் உலகத்திலே வளரும் போது என்ன ஒரு தாக்கத்தை பெற்றுக்கொள்வார்கள் என்பதை முன்னறிவிப்பது கிடையாது. அன்னாள் தேவனுக்கு முதலிடம் கொடுத்தாள். அன்னாளுடைய முன்மாதிரியான வாழ்க்கை நம்மையும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க கட்டாயப்படுத்துகிறது.

உதவியாளவர்கள் தசமபாகம் மற்றும் காணிக்கை சேகரிக்கும் போது நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்க நமக்கு சவாலாக உள்ளது.

பரலோகத் தகப்பனே உம்மையும் உம்முடைய ராஜ்யத்தையும் முதலாவது தேட உதவி செய்யும். எங்கள் தொழுகையை ஏற்றுக்கொள்ளும் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

7. தாவீது தேவனுக்கு முதலிடம் கொடுத்தப்போது…

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது நமக்கு கடினமானதாக இருக்கலாம். தாவீதுடைய வாழ்க்கையில் இருந்து நாம் கற்றுக்கொள்வது நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதற்கு உதவியாக இருக்கும்.

தாவீது ராஜா ஒரு கதாநாயகனாக இஸ்ரவேல் ஜனங்களுடைய சரித்திரத்தில் நினைவுகூறப்படுகிறான். தேவனுக்கு முதலிடம் கொடுப்பதற்கான அழைப்பினை ஏற்றுக்கொண்டது அவருடைய வாழ்வில் மிக பெரிய தருணம் ஆகும். இஸ்ரவேலர்கள் ராட்சனாகிய கோலியத்தை பார்த்தும் அவருடைய இழிவான வார்த்தைகளை கேட்டும் பயந்து நடுங்கின போது தாவீது தேவனை தன்முன் பாதுகாப்பிற்காக வைத்தார். தாவீது சில கூழாங்கற்களை எழுத்து கோலியாத்தை யெகோவா தேவனுடைய நாமத்தில் எதிர்கொள்வது மற்றவர்களுக்கு முட்டாள்தனமாக தெரியலாம். ஆனால் அவர் தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். தேவன் அந்த யுத்தத்தில் தாவீதுக்கு வெற்றியை கொடுத்தார். தாவீது ராட்சனாகிய கோலியாத்தை தோற்கடித்தாள். மாளிகையில் பணிபுரிந்தார். சவுல் ராஜாவையும் மகளை திருமணம் செய்தார். ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டார்.

நீங்கள் அவருடைய வாழ்வில் கோலியாத்தை தோற்கடித்தபின்பு மகிமை மேல் மகிமையாக இருந்திருக்கும் என நினைக்கலாம். ஆனால் அப்படி அல்ல. சவுல் ராஜா ஒரு மிகப்பெரிய தீவிரவாதியைப் போல தாவீதை உபத்திரவப்படுத்தினார். இஸ்ரவேல் தேசத்தின் படைவீரர்கள் கோலியத்துடைய விழுகையை கண்டவர்கள் இப்பொழுது தாவீதை கொலை செய்தோ உயிரோடோ பிடிக்க முயற்ச்சி செய்தார்கள். வெறுப்பான குழப்பமான ஒரு சூழ்நிலையிலும் எல்லாம் முடிந்தது என்ற நிலையிலும் தேவன் மறைந்து கொண்டது போல தோன்றினாலும் தாவீது தேவனுக்கு முதலிடம் கொடுத்தார்.

ஒருமுறை சவுல்ராஜா வீரர்களுடன் தங்கியிருந்து இடத்திற்கு தாவீது செல்லும் போது சவுல் தூங்கி கொண்டு இருந்தார். தாவீது கொடுங்கோலனாகிய சவுலை கொலை செய்திருக்கலாம். அவருடைய சிங்காசனத்தை கைப்பற்றியிருக்கலாம் ஆனால் அப்படி செய்யவில்லை. தேவன் இந்த வழியில் பழிவாங்க அனுமதி கொடுக்கவில்லை எனவே தாவீது தேவனுக்கு முதலிடம் கொடுத்து தொடர்ந்து ஒளித்து வாழ்ந்தார்.

தாவீது சில நேரங்களில் தேவனுக்கு முதலிடம் கொடுக்கவில்லை. பத்சேபாளிடத்தில் விபச்சாரம் செய்தல், அவளுடைய கணவனை கொலை செய்தல் போன்ற செயல்களில் தாவீது பாவம் செய்ததற்கு தெளிவான உதாரணங்களாக இருக்கிறது. ஆனால் தேவன் தீர்க்கதரிசி நாத்தான் மூலம் உணர்த்திய போது தாவீது அவர் செய்த பாவத்திற்கு பொறுப்பேற்று கொண்டு மனந்திரும்பி மீண்டும் தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். அவருடைய வாழ்வின் முடிவில் அவருடைய அரண்மனை தேவனுடைய வீட்டைவிட சிறப்பானதாக இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாமல் தேவனுடைய ஆலயத்தை சிறப்பானதாக கட்ட தன்னால் முடிந்த எதையும் செய்வேன் என்று ஆணையிட்டார்.

தாவீது தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். அவருடைய முன்மாதிரியான வாழ்க்கை நம்மையும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க கட்டாயப்படுத்துகிறது.

உதவியாளர்கள் தசமபாகம் மற்றும் காணிக்கை சேகரிக்கும்போது நாம் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதற்கான சவாலாக நமக்கு உள்ளது.

பரலோக தகப்பனே, உம்மையும் உம்முடைய ராஜ்யத்தையும், முதலாவது தேட உதவி செய்யும். எங்கள் தொழுகையை ஏற்றுக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

8. தானியேலும் அவரது நண்பர்களும் தேவனுக்கு முதலிடம் கொடுத்தப்போது....

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது நமக்கு கடினமாக இருக்கலாம். தானியேல் மற்றும் அவரது நண்பர்களுடைய வாழ்க்கையில் இரந்து நாம் கற்றுக்கொள்வது நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதற்கு உதவியாக இருக்கும்.

தானியேல் பாபிலோனுக்கு அடிமையாக கொண்டு செல்லும் போது வாலிபனாக இருந்தான். பாபிலோன் மிகப்பெரிய ராஜ்யத்தின் தலைநகரமாக இருந்தது. பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேசர் அவர் வெற்றி பெற்ற தேசங்களிலிருந்து அறிவில் சிறந்த வாலிபர்களை கொண்டு வந்தார். அவர்களுக்கு பாபிலோன் ராஜ்யத்தின் மதம், அறிவியல், கல்விமுறையினை கற்றுவித்து பாபிலோன் ராஜ்யத்தின் விரிவாக்கத்திற்கு பங்களிப்பார்கள் என்று நம்பினார். தானியேல் மற்றும் நண்பர்களோடு பத்தாயிரம் வாலிபர்கள் கொண்டுவரப்பட்டார்கள். அவர்களில் சிறப்பானவர்கள் அரண்மனைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். தானியேல் சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ அவர்களில் சிலர் ஆவர்கள். அவர்களுடைய முதலாவது சோதனை வேதாகம உணவு பற்றியது. தேவனுக்கு முதலிடம் கொடுப்பதால் அவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை இழக்காமல் அவர்களுடைய உயிரைக் கூட இழக்க நேரிடலாம்.

இந்த வாலிபர்கள் என்ன சம்பவித்தாலும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க தீர்மானித்தார்கள். அவர்கள் உணவு குறித்த காரியத்தில் உண்மையாக இருந்தார்கள். தேவன் அவர்களுக்கு ஞானத்தை கொடுத்தார். அவர்கள் பாபிலோன் ராஜ்யத்தின் பல்கலைகழகத்தில் தலைசிறந்த மாணவர்கள் ஆவதற்கு தேவன் உதவினார். பின்பு தானியேல் மற்ற ஞானிகளுக்கு மேலான பொறுப்பு கொடுக்கப்பட்டது. அவருடைய மூன்று நண்பர்களும் தலைநகரத்தில் சிறந்த தலைவர்களாக்கப்பட்டார்கள். தேவனுக்கு பதிலாக சிலையை வணங்குவதைவிட உயிரை விடுவதை மேலானதாக எண்ணினார்கள். தானியேல் 3:17வது வசனத்தில் அவர்களது வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்; விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்."

தானியேல் வயதான மனிதனாக இருக்கும் போதும் கூட காலையில் ஜெபிப்பதை நிறுத்துவதை விட சிங்ககெபியில் சிங்கங்களுக்க இரையாவது மேலானது என்று நீர்மானித்தார். ஆனால் தேவன் தானியேலை விடுவித்தார். தானியேல் தேவனை துதித்தார். தானியேல் பாபிலேன் தேசத்தின் பிரதம மந்திரி ஆனார். தானியேலும் அவரது நண்பர்களும் தேவனுக்கு முதலிடம் கொடுத்தார்கள். அவர்களுடைய முன்மாதிரியான வாழ்க்கை நம்மையும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க கட்டாயப்படுத்துகிறது. ஊதவியாளர்கள் தசமபாகம் மற்றும் காணிக்கை சேகரிக்கும் போது தேவனுக்கு முதலிடம் கொடுக்க நமக்கு சவாலாக உள்ளது.

பரலோகத் தகப்பனே, உம்மையும் உம்முடைய ராஜ்யத்தையும் முதலாவது தேட எங்களுக்கு உதவி செய்யும். எங்கள் தொழுகையை ஏற்றுக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

9. எஸ்தர் தேவனுக்கு முதலிடம் கொடுத்தப்போது...

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது நமக்கு கடினமானதாக இருக்கலாம். எஸ்தருடைய வாழக்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்வது நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்க உதவியாக இருக்கும்.

எஸ்தர் ராணியை தெரிந்தெடுக்கிற செயல்முறைக்கு ஒப்புதல் அளித்து இறுதியில் அவளை பெரிசிய ராஜ்யத்தின் ராணியாக செய்தது. எஸ்தருடைய மனதில் அனேக சந்தேகங்கள் வந்திருக்கலாம். இஸ்ரவேல் ஜனங்கள் நாடுகடத்தப்பட்ட நிலையில் வாய்ப்பு மங்கலான நிலையில் இருந்தது. தேவன் பெர்சியருடைய ஆழுகையில் கைவிட்டதாக தெரிந்தது. இருப்பினும் கீழ்படிதல் தேவைபட்டது. எஸ்தர் அழகாக அகமும் புறமும் அழகானவளாக இருந்தாள். இரக்கமற்ற ராஜா கூட அதை காணமுடிந்தது. அகாஸ்வேரு ராஜா எல்லா பெண்களுக்கும் மேலாக எஸ்தரை ராணியாக தெரிந்து கொண்டார். எஸ்தர் கடந்த காலங்களில் தன்னுடைய கனவில் மட்டுமே காணமுடிந்த வாய்ப்புகள் இப்பொழுது கிடைத்தால் தன்னுடைய சொந்த மாளிகையில் மனமகிழ்ச்சியாக இருந்தாள்.

நான் ஏழ்மையான நிலையில் வறுமையினால் எதுவும் இல்லாமல் போராடும் போது நாம் தேவனுக்கு முதலிடம் கொடுப்பது கடினமானதாக இருக்கலாம். அதே வேளையில் வசதியும் அதிகாரமும் கூட மக்களை தேவனை விட்டு பின்வாங்க செய்யும். நீங்கள் உங்கள் அருகாமையில் உள்ளவர்களைவிட அதிகமான ஐசவரியம் செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கும் போது தேவனுக்கு முதலிடம் கொடுப்பீர்களா? நீங்கள் எஸ்தருடைய முன்மாதிரியை பின்பற்றி பாதுகாப்பு யாருக்கு தேவைப்படுகிறது என்பதை நினைப்பீர்களா?

அகாஸ்வேரு ராஜா ஆமானால் ஏமாற்றுப்பட்டு எபிரெயர் அனைவருக்கும் மரணதண்டனை கொடுக்கிற சட்டத்தை வழங்கினாள். ராஜாவிடம் இரக்கத்தை வேண்டுவது எஸ்தருக்கு சவாலாக பயமாகவும் இருந்தது. எஸ்தருடைய சொந்த வார்த்தைகளை எஸ்தர் 4:11வது வசனத்தில் வாசிக்கிறோம்.

"நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம்பண்ணுவோம்; இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள்."

எஸ்தருக்கு பயம் இல்லாமல் இல்லை, ஆனால் அவள் தைரியம் நிறைந்தவள் எபிரெயர்களை உபவாசம் இருந்து ஜெபிக்க சொல்லிவிட்டு ராஜாவுடைய சமூகத்தில் அழைக்கப்படாமல் சென்று ஆபத்தை தன்னுடைய வாழ்க்கையில் எதிர்கொண்டாள். மிகப்பெரிய ஆபத்தான நேரத்தில் தேவனுக்கு முதலிடம் கொடுத்து சரித்திரத்தில் மறக்க முடியாத வார்த்தைகளை அறிவித்தாள். நான் செத்தாலும் சாகிறேன் என்றாள். தேவன் ராஜாவுடைய கண்களில் தயவு கிடைக்க செய்தார்.

எஸ்தர் தேவனுக்கு முதலிடம் கொடுத்தாள், அவளுடைய முன்மாதிரியான வாழ்க்கை நம்மையும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க கட்டாயப்படுத்துகிறது. ஊதவியாளர்கள் தசமபாகம் மற்றும் காணிக்கை சேகரிக்கும் போது தேவனுக்கு முதலிடம் கொடுக்க நமக்கு சவாலாக உள்ளது.

பரலோகத் தகப்பனே உம்மையும் உம்முடைய ராஜ்யத்தையும் முதலாவது தேட எங்களுக்கு உதவி செய்யும். எங்கள் தொழுகையை ஏற்றுக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

10. பேதுரு தேவனுக்கு முதலிடம் கொடுத்தப்போது…

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது நமக்கு கடினமானதாக இருக்கலாம். பேதுருவுடைய வாழ்க்கையில் இருந்து நாம் கற்றுக்கொள்வது நம்முடைய வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடம் கொடுக்க உதவியாக இருக்கும்.

இயேசுவால் அழைக்கப்பட்ட சீஷர்களில் வயதானவர்களில் ஒருவராக பேதுரு இருந்தார். பேதுரு மன உறுதியுடையவரும் ஒப்பானவருமாக இருந்தார். புயல் இரவில் இயேசு ஆவியிலே சீஷர்களுக்கு முன்பு தண்ணீரில் நடந்து வந்தபோது படகில் இருந்து குதித்து தண்ணீர் மேல் நடப்பதாக இருந்தாலும் இயேசுவோடு இருக்க வேண்டும் என்ற தன் விருப்பத்தை முதலில் சொன்னவர் பேதுரு ஆவார். பேதுரு ஏறத்தாழ முழுமையாக மூழ்கி போகிற வரைக்கும் எளிதானதாக தெரிந்தது. தண்ணீர் மேல் நடந்த போது கொஞ்ச நேரத்தில் பேதுரு சந்தேகமடைந்தார். கொந்தளித்த தண்ணீரில் அவர் மூழ்க ஆரம்பித்தார். பேதுரு இயேசுவிடம் வரும்படி அழைக்கப்பட்டார். ஆனைத்து சீஷர்களும் அவர் தோல்வியடைந்ததாக கண்டனர். அனைவருக்கும் முன்பு அவர் தண்ணீர் மேல் நடப்பதில் தோல்வியடைந்ததால் கண்டிப்பாக அவமானமடைந்திருப்பார். தோல்வியின் மத்தியில் தேவனுக்கு முதலிடம் கொடுப்பது எளிதானது அல்ல. ஆனால் பேதுரு தேவனுக்கு முதலிடம் கொடுத்தார்.

பேதுரு உதவிக்காக சத்தமிட்டார். இயேசு அவரை காப்பாற்றினார். இயேசுவை கைது செய்யப்பட்டு சிலுவையில் அறைந்த போது இதை போல மீண்டும் நடந்தது. பேதுரு தனக்கு என்ன சம்பவித்தாலும் இயேசுவோடு இருப்பதாக வாக்குப்பண்ணியிருந்தார் ஆனால் இயேசு அந்த இரவே நீ மறுதலிப்பாய் என்று பேதுருவை எச்சரித்தார். பேதுரு பயமடையவில்லை. ஆவர் இயேசுவுக்காக மரிக்கவும் ஆயத்தமாக இருந்தார். கெத்சமனேயிலே பேதுருவுடைய தாக்குதல் மூலம் நாம் இதை புரிந்துகொள்ளலாம். படைவீரர்கள் சூழ்ந்து நிற்கையில் ஒருவனை பேதுரு கொல்ல முயற்சித்தார். நல்ல வேளை அவர் மீன் பிடிப்பவர் படைவீரன் அல்ல. அவர் தவறி அந்த மனிதனுடைய காதினை வெட்டி விட்டார். அதன் பின்பு இயேசு செய்தது அவரை குழப்பமடைய செய்தது. இயேசு அந்த மனிதனை குணபடுத்தி தனக்க பாதுகாப்பு தேவையில்லை என்றார். அதற்கு என்ன அர்த்தம்? பேதுரு சண்டையிட ஆயத்தமாக இருந்தார். இதனால் பேதுரு இயேசுவை தூரத்திலே பின் தொடர்ந்தார். இயேசு அறிவித்தது போல சேவல் கூவுவதற்கு முன் மூன்று முறை இயேசுவை மறுதலித்தார். யோவான் இயேசுவுக்கு அருகிலே பயங்கரமான சூழ்நிலை முழுவதும் நின்றார். பேதுரு மீண்டும் தோல்வி அடைந்தார்.

இதன் பிறகு வழிநடத்துவது சாத்தியமர்குமா? நம்முடைய தோல்விகளின் மத்தியிலும் குழப்பத்திலும் அவமானத்திலும் தேவனுக்கு முதலிடம் கொடுப்பது இயலாத காரியம். தேவனிடம் மன்னிப்பை பெற்றுக்கொண்டு தேவனுடைய வல்லமையால் மட்டுமே மீண்டும் தொடங்க முடியும். அதன் பின்பு பேதுரு இயேசு மீண்டும், மீண்டும் நம்பினதற்கு ஏற்றார் போல சிறந்த தலைவராக ஆனார். நீங்கள் உங்கள் கடந்த காலத்தில் தசமபாகம் மற்றும் காணிக்கை கொடுப்பதில் உண்மையற்றவர்களாக இருந்திருக்கலாம். நீங்கள் தோல்வி அடைந்திருக்கலாம். தேவனுக்கு முதலிடம் கொடுப்பது என்பது தேவனிடம் மன்னிப்பு கேட்டு இன்று அவருடைய மன்னிப்பை ஏற்றுக்கொள்வதாகும்.

எப்படியெனில் உங்களுடைய பொருந்தாத காரியங்களில் மீண்டும் தேவன் மேல் நம்பிக்கை வைக்க தொடங்குவது ஆகும். பேதுரு தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். அவருடைய முன்மாதிரியான வாழ்க்கை நம்மையும் அப்படி செய்ய கட்டாயப்படுத்துகிறது. உதவியாளர்கள் தசமபாகம் மற்றும் காணிக்கை சேகரிக்கும் போது நாம் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதற்கான சவாலாக உள்ளது.

பரலோகத்தின் தகப்பனே உம்மையும் உம்முடைய ராஜ்யத்தையும் முதலாவது தேட உதவி செய்யும். எங்கள் தொழுகையை ஏற்றுக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

11. பவுல் தேவனுக்கு முதலிடம் கொடுத்தப்போது...

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது நமக்கு கடினமானதாக இருக்கலாம். நாம் பவுல் அப்போஸ்தலருடைய வாழ்க்கையில் கற்றுக்கொள்வது நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதற்கு உதவியாக இருக்கும்.

பவுல் எப்பொழுதும் தேவனுக்கு முதலிடம் கொடுப்பவர் ஆனால் இயேசுவை இயேசுவை பின் பற்றுகிறவர்களை உபத்திரவ படுத்தியபோது அவர் தனக்கு முன்பு எது சரியானது என்று காணமுடியாதவாறு இருந்தார். பவுல் தரையில் விழுந்த பிறகு தான் இயேசுவிடம் இருந்த ஒளியினால் பார்வையை இழந்தார். அப்பொழுதுதான் உண்மையாக பார்வை அடைந்தார். பவுல் தேவனுக்கு முதலிடம் கொடுப்பது என்பது தாழ்மையாக தன்னுடைய தவறான எண்ணங்களை கேள்வி கேட்டுக் கொண்டு வேதாகமத்திற்கு திரும்புவதாக இருந்தது. அரேபியாவிலிருந்து மூன்று வருடங்களுக்கு பிறகு தேவன் இந்த உலகத்தை கைவிட்டுவிடவில்லை. இயேசு தான் இரட்சகர் அனைத்து மனிதர்களுக்கும் அவைர கொண்டு சேர்க்க வேண்டும் என்ற புதுபிக்கப்பட்ட நம்பிக்கையுடன் திரும்பினார். பவுல் பட்டணங்கள் தோறும் கிராமங்கள் தோறும் பயணப்பட்டு இயேசுவை அறிவித்து தேவனுக்கு முதலிடம் கொடுத்தார்.

அனேக முறை மனிதர்கள் அவரை கொலை செய்வதற்காக முயற்சித்தாலும் அவர் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதை எதுவம் செய்ய முடியவில்லை. ஒரு சமயம் பவுலும் சீலாவும் அவர்களுடைய வஸ்திரங்கள் கிழிக்கப்பட்டு பட்டணத்தின் மத்தியில் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள். அவர்களை உட்காவலறையில் அடைத்து அவர்கள் கால்களை தொழுவமரத்தில் மாட்டி வைத்தார்கள் நேரத்திலும் பவுலும் சீலாவும் நினைத்து பார்க்க முடியாததை செய்தார்கள் குறைகூறுவதற்க பதிலாக அவர்கள் இயேசுவை பாடி துதித்தார்கள். நீங்கள் உங்களுடைய கடைசி தருணத்தில் இப்பொழுது இருக்கலாம் எல்லோரும் தவறானதாக தோன்றலாம் தேவனை தொழுது கொள்வதற்கு இன்று போல சிறந்த நேரம் இல்லை. தேவன் பூமியை அதிரப்பண்ணினார். சிறைச்சாலைக்காரன் கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்றும் எண்ணி பட்டயத்தை உருவி தன்னை கொலை செய்து கொள்ளப் போனான். பவுலும் சீலாவும் அந்த சிறைச்சாலைக்காரன் தங்களை அடித்து துன்புறுத்தி இழிவுப்படுத்தியதை நினைத்து பார்த்திருந்தால் அவனை பழிவாங்குவதற்கு அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் அவனுடைய சரீரம் தரையில் விழுவதற்காக காத்திருப்பதுதான் ஆனால் பவுலும் சீலாவும் தேவனுக்கு முதலிடம் கொடுக்கிற மனிதர்கள். அந்த குறுகிய நேரத்தில் அவர்கள் அந்த சிறைச்சாலைக்காரனை மன்னிக்கத் தீர்மானம் செய்து அவன் தனக்கு தீங்கு செய்யாதபடி சத்தமிட்டார்கள். அந்த சிறைச்சாலை அதிகாரியும் அவருடைய குடும்பமும் இயேசுவை அறிந்து கொண்டு அந்த இரவில் அவர்களும் இராஜாதி ராஜாவை தொழுது கொண்டார்கள்.

பவுலும் சீலாவும் தேவனுக்கு முதலிடம் கொடுத்தார்கள். அவர்களுடைய முன்மாதிரியான வாழ்க்கை நம்மையும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க கட்டாயப்படுத்துகிறது.

உதவியாளர்கள் தசமபாகம் மற்றும் காணிக்கை சேகரிக்கும் போது நாம் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதற்கான சவாலாக உள்ளது.

பரலோகத்தின் தகப்பனே உம்மையும் உம்முடைய ராஜ்யத்தையும் முதலாவது தேட உதவி செய்யும். எங்கள் தொழுகையை ஏற்றுக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

12.யோவான் தேவனுக்கு முதலிடம் கொடுத்தப்போது...

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது நமக்கு கடினமானதாக இருக்கலாம். யோவான் நம்முடைய வாழ்க்கையில் இருந்து நாம் கற்றுக்கொள்வது நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்க உதவியாக இருக்கும்.

இயேசுவின் சீஷர்களில் யோவான் வயது குறைந்த நபராக இருந்தார். அவர் முழு இருதயத்தோடு இயேசுவை நேசித்தார். இயேசுவை கைது செய்த போது சீஷர்கள் அனைவரும் சிதறி போன போதும் யோவான் முழு சோதனையிலும் இயேசுவுக்கு அருகாமையில் இருந்தார். இயேசு தன்னுடைய தாயாரை கவனித்து கொள்ளுகிற பொறுப்பை கொடுத்து யோவானின் உண்மைத்தன்மையை கனப்படுத்தினார். ஆனால் இளைஞனாக இருக்கையில் அவர் பழிவாங்குகிற எண்ணம் மற்றும் கோபம் அடைகிறவராக இருந்தார். இயேசுவை ஏற்றுக்கொள்ளதவர் மீது இரக்கப்படுவது அவருக்கு கடினமானதாக இருந்தது. ஒரு முறை சமாரியாவில் இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவர்களை வானத்தில் இருந்து அக்கினியை வரப்பண்ணி அழித்துப் போடும்படி அவர் இயேசுவிடம் கூறினார். யோவானுடைய வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடம் கொடுப்பது ஒரு முறை வருகிற தைரியத்தினால் அல்ல மாறாக முழுவாழ்க்கையையும் அர்பணித்து இயேசு நேசித்தது போல நேசிப்பதாக இருந்தது. இயேசு பரலோகத்திற்கு போனபின்பு யோவான் மரணபரியந்தம் உண்மையாக இருந்தார். எழுபது வருடங்களுக்கு பிறது இயேசு சபை போதகராக இருந்து புதிய ஏற்பாட்டில் அனேக புத்தகங்களை எழுதியுள்ளார். யோவான் சுவிசேஷம் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் அவைகளில் அடங்கும். அவருடைய திருச்சபைகளுக்கான கடிதங்கள் அவருடைய மனமாற்றத்தை குறித்து நாம் அறிந்து கொள்ள வழிவகுக்கிறது. 1 யோவான் 4:7வது வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

“பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்;”

நம்முடைய ஆசைகளையும் கோபத்தையும் கட்டுப்படுத்த முடியாமல் சில வேளைகளில் நாம் ஏமாற்றம் அடைகிறோம் ஆனால் யோவான் வாழ்க்கை முழுவதும் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதால் அவருடைய வாழ்க்கையில் ஆழமான மாற்றம் அடைந்திருந்தார்.

யோவான் தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். அவருடைய முன்மாதிரியான வாழ்க்கை நம்மையும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க கட்டாயப்படுத்துகிறது.

உதவியாளர்கள் தசமபாகம் மற்றும் காணிக்கை சேகரிக்கும் போது நாம் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதற்கான சவாலாக உள்ளது.

பரலோகத்தின் தகப்பனே உம்மையும் உம்முடைய ராஜ்யத்தையும் முதலாவது தேட உதவி செய்யும். எங்கள் தொழுகையை ஏற்றுக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

13.நோவா தேவனுக்கு முதலிடம் கொடுத்தார்

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது நமக்கு கடினமானதாக இருக்கலாம். நாம் நோவாவுடைய வாழ்க்கையில் இருந்து கற்றுக்கொள்வது நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதற்கு உதவியாக இருக்கும். நீங்கள் எப்பொழுதாவது உங்கள் பட்டணத்தில் வாழ்கிற மக்களுக்கு தேவனை குறித்த அக்கறை இல்லாமல் இருப்பதை அறிந்து வருந்தியிருக்கிறீர்களா? நோவா எப்படி வருந்தியிருப்பார் என்பதை அப்பொழுது நீங்கள் அறிந்து கொள்வீர்கள். உண்மை என்னவெனில் அவர்கள் தேவன் மீது மட்டும் அக்கறை இல்லாதவர்கள் சூழ்நிலை மிகவும் நீளமானதாக இருந்தது. இது நீடித்திருக்குமானால் அனைத்து மனிதர்களும் அழிக்கப்பட்டிருப்பார்கள். இந்த நேரத்தில் தேவன் உலகத்தை பாதுகாக்க முயற்சித்தார். நோவா தேவனுக்கு முதலிடம் கொடுத்து அவருடைய வாழ்க்கையை அர்பணித்து பேழையை கட்டவும் அனைவரையும் மனந்திரும்பி தங்கள் வாழ்க்கையை மாற்றி கொள்ளவும் அழைப்பு கொடுக்கும்படி தேவனால் கட்டளை கொடுக்கப்பட்டது.

அவருடைய நோவாவுடைய எச்சரிப்பை பெற்ற மக்கள் அனைவராலும் அவர் கேலி செய்யப்பட்டு ஏளனம் செய்யப்பட்டார். ஆனாலும் அவர் விட்டுவிடவில்லை. ஒவ்வொரு நாளும் நோவா தேவனுக்கு முதலிடம் கொடுத்து தேவன் கொடுத்த ஆலோசனைகளை பின்பற்றினார். நாம் அனைவரும் நம்முடைய சொந்த திட்டங்களுக்கும் கடமைகளுக்கும் முன்னுரிமை கொடுப்போம். ஒருவேளை நீங்கள் நிர்வாகியாக அனேக காரியங்களில் பொறுப்பு வகிக்கிறவராக இருக்கலாம்.

ஒரு வேளை தொடர்ந்து தேவைகளுக்காக போராடுகிறவர்களாக இருக்கலாம். நோவாவை போல நாம் அனைவரும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு மாதமும் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடுவது நமக்கு சவாலாக உள்ளது. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடும் போது மற்ற அனைத்தும் கொடுக்கப்படும் என்று தேவன் வாக்கு பண்ணியுள்ளார். தேவன் தம்முடைய வாக்கை நிறைவேற்றுகிறார். ஊலகத்தில் வெள்ளபெருக்கு ஏற்பட்ட போது பேழை நோவாவையும் அவருடைய குடும்பத்தையும் பாதுகாத்தது. மனித இனம் முழுவதும் அழியாமல் காக்கப்பட்டது. நோவாவின் நாட்களைப் போல தேவனுடைய எச்சரிப்பை நீங்கள் மக்களுக்கு கொடுக்கும் போது அவர்கள் உங்களை கேலி செய்து ஏளனம் செய்யலாம். ஆனால் சீக்கிரத்தில் ஒரு நாள் தேவன் நம்மை பாதுகாக்க மீண்டும் வருவார். தேவனுக்கு முதலிடம் கொடுத்தவர்கள் இரட்சிக்கப்பட்ட அனைவரோடும் சேர்ந்து அவர்களுடைய முயற்சிக்கான பலனை காண்பார்கள்.

நோவா பேழைக்கான பலனை ஆணி போன்றவற்றில் கூட தேவன் கட்டளைக்கு கீழ்படிந்து தேவனுக்கு முதலிடம் கொடுத்தார். அவருடைய முன்மாதிரியான வாழ்க்கை நம்மையும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க கட்டாயப்படுத்துகிறது. உதவியாளர்கள் தசமபாகம் மற்றும் காணிக்கை சேகரிக்கும் போது தேவனுக்கு முதலிடம் கொடுக்க நமக்கு சவாலாக உள்ளது.

பரலோகத்தின் தகப்பனே உம்மையும் உம்முடைய ராஜ்யத்தையும் முதலாவது தேட உதவி செய்யும். எங்கள் தொழுகையை ஏற்றுக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.